புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

=====================================================================

# எட்டுத்தொகையில் தமிழர் பண்பாட்டுக் குறியீடுகள்

சி. மேரி ஜீவிதா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சரவணம்பட்டி, கோயம்புத்தூர் -35

=====================================================================

## முன்னுரை

பண்பாடு என்பது வாழ்க்கை முறையாகும். ஒரு சமுதாயத்தில் விளங்குகின்ற கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் மொழி,இலக்கியம், விழுமியங்கள் போன்றவை பண்பாட்டுக் கூறுகளாக கருதப்படுகின்றன.தமிழர் பண்பாட்டை சங்க இலக்கியங்கள் அகம் புறம் என இரண்டாக எடுத்தியம்பியுள்ளன.இவ்விரண்டிலும் வெளிப்படும் பண்பாட்டுக் குறியீடுகளை எட்டுத்தொகை நூல்கள் வழியாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழர் பண்பாடு

சங்க இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டைச் சிறப்பாக காண முடிகிறது. இச்சிறப்பினை உணர்த்துவதாக,

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கு ஒரு குணம் உண்டு அமிழ்தே அவனுடை மொழியாகும் அன்பே அவனுடை வழியாகும்"

என்ற நாமக்கல் கவிஞரின் பாடல் அமைந்துள்ளது.தமிழனின் அகப்புற வாழ்வில் அன்பு, பாசம், நேசம், ஈரம், வீரம், கொடை போன்ற உயரிய பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## அகப்பண்பாட்டு குறியீடுகள்

தமிழர்களின் விருந்தோம்பல், ஈகை உணவு முறை, வழிபாடு,திருமண முறை, ஆடை அணிகலன்கள், அறச்செயல்கள் போன்றவை அகப்பண்பாட்டை பிரதிபலிப்பாக அமைந்துள்ளன.

தமிழர்கள் வயது மூத்தோரையும் சான்றோரையும் நேரில் பார்த்தால் எழுந்து நிற்பார்கள். தனது இல்லத்திற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும் போது அவருடன் கூடவே சென்று குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்பி வருவார்கள். மேலும் பெண்கள் தாலி, மெட்டி,வளையல் போன்றவை அணிவதும் குங்குமம், மஞ்சள் இட்டுக் கொள்வதும் வீட்டிற்கு வெளியே திண்ணை ஒன்றை அமைத்து விருந்தோம்பல் பேணியதும் அகப்பண்பாட்டை வெளிப்படுத்தும் குறியீடுகள் ஆகும்.

## விருந்தோம்பல்

குறுந்தொகையில் விருந்தோம்பல் பண்பு இருந்ததை அறிய முடிகின்றது. இரவில் வீட்டின் திண்ணையில் யாராவது புதியவர் உள்ளனரா என்பதைப் பார்த்து அவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு விருந்தோம்பல் நிகழ்ந்தமையை,

"நள்ளென வந்த நாரின் மாலைப்
புலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ" (குறுந்தொகை 118)

*என்னும் பகுதி வாயிலாக அறிய முடிகிறது. இதன் வழியாக வழிப்போக்கர்களையும் ஆதரவற்றோரையும் அரவணைத்து விருந்தோம்பும் பண்பு தமிழ்ச்சமூகத்தில் இருந்தமை புலனாகின்றது.*

*ஈகை*

*அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுவது பண்டைத் தமிழர்களின் பண்பாக இருந்தது. இதனை,*

*" புணரி பொருத பூமணல் அடைகரை ஆழி மருங்கின்*
*அலவன் ஓம்பி வலவன் வள்பு ஆய்ந்து ஊர*
*நிலவு விரிந்தன்றால் காணலானே"*

*(நற்றிணை 11)*

*என்னும் நற்றிணையின் பாடல் வழி அறிய இயலும். தலைவன் ஒருவன் தேரின் மேல் வருகின்றான். அத்தேர் கடற்கரையின் வழியே செல்கிறது கடற்கரையில் நண்டுகள் உலாவிக் கொண்டு இருக்கின்றன. தேரை ஓட்டி வரும் தேர்ப்பாகன், சக்கரத்திலே நண்டுகள் அகப்பட்டு மாண்டு விடாதபடி கவனமாக தேரை ஓட்டி வருகின்றான். அவனுடைய செய்கைக்கு உதவியாக நிலவு தோன்றுகிறது. இந்நிகழ்வின் வழி, தமிழர் தம் உயிர்க்கருணையை அறிய இயலுகிறது.*

*புறப்பண்பாட்டுக் குறியீடுகள்*

*தமிழர்களின் போர், வீரம், கொடை போன்றவை புறப்பண்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. பண்டைத் தமிழர் போர் செய்தலை வீரத்தின் அடையாளமாகவும் வாழ்வின் அங்கமாகவும் கொண்டிருந்தனர் . அரசாட்சியாக இருந்தாலும் சரி உயிராக இருந்தாலும் சரி தடையின்றி தர இசையும் கொடை வள்ளல்களாகவும் தமிழர் திகழ்ந்தனர்.*

*போர்*

*சங்ககாலப் போர் வீரர்கள் போருக்கு செல்லும்போது ஒரு குறிப்பிட்ட பூவை தலையில் சூடிச் செல்வார்கள்.அவை போரில் வீரன் எத்தகைய போரை மேற்கொண்டு இருந்தான் என்பதை உணர்த்தும் குறியீடாக அமைந்திருந்தன.இதனை,*

*" வெட்சி நிரை கவர்தல்;*
*மீட்டல் கரந்தையாம் ;*
*வட்கார் மேல் செல்வது வஞ்சி;*
*உட்காது எதிர் ஊன்றல் காஞ்சி;*
*எயில் காத்தல் நொச்சி;*
*அது வளைத்தல் ஆகும் உழிஞை;*
*அதிரப் பொருவது தும்பையாம்;*
*போர்க்களத்து மிக்கோர் செறு வென்றது வாகையாம்"*

*என்று புறநானூற்று பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.அதாவது*

*நிறை கவர்தல் - வெட்சிப் பூ*
*நிரைமீட்டல் - கரந்தைப் பூ*
*மண் கவர்தல் - வஞ்சிப் பூ*
*மண் காத்தல் - காஞ்சிப் பூ*
*மதில் காத்தல் - நொச்சிப் பூ*
*மதில் வளைத்தல் - உழிஞைப் பூ*
*போரிடல் - தும்பைப் பூ*
*வெற்றி பெறுதல் - வாகைப் பூ*

*இவ்வாறு புறநானூற்றுப் பாடல்களில் பூவானது போருக்கான குறியீடாக அமைந்துள்ளது.போரில் வெற்றி தோல்வி போன்ற வெவ்வேறு நிலையை வெளிப்படுத்த ஒவ்வொரு வகையான பூக்களை அணிந்து தமிழர்கள் போரிட்டதை புறநானூறு வழி அறிய இயலுகின்றது.*

கொடை

திருமணத்திற்கு வருகை புரிந்த உறவினர்கள் அனைவருக்கும் விருந்து படைத்த கொடைத்தன்மை அகநானூற்றில் இடம்பெறுகின்றது. இதனை,

"மைப்பு அறப் பழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வுரையா வண்மையோடு புரையோர்ப் பேணி"
(அகநானூறு 136. 1- 2)

என்னும் பகுதி வழியாக அறிய முடிகிறது. நெய் மிக்க வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்து குற்றமற ஆக்கினர். அளவற்ற வள்ளன்மையுடன் உயர்ந்தோரை உண்ணச் செய்தனர் என்று அகநானூற்றின் மருதத்திணைப் பாடல் வெளிப்படுத்துகின்றது.

முடிவுரை

எட்டுத்தொகை நூல்கள் தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாக திகழ்கின்றது.தமிழ் மக்களின் வாழ்வியல் ஒழுங்குகளும் பண்பாடுகளும் பதிவு செய்யப்பட்டு பண்டைத் தமிழரின் அகம் புறம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியதாக திகழ்கின்றது.

பண்டைத் தமிழ் மக்கள் தவறாது ஒழுகிய பண்பாட்டின் எச்சமாக விட்டுச் சென்ற மிகச்சிறந்த நற்பண்புகளும் பண்பாட்டுக் குறியீடுகளும் பின்வரும் தலைமுறையினர் நன்முறை நல்லயில் பின்பற்றும் வகையில் எட்டுத்தொகை நூல்கள் தொகுத்துரைத்திருக்கும் பாங்கினை இக்கட்டுரையின் வழி அறிய முடிந்தது.

துணைநூல் பட்டியல்

1. குறுந்தொகை - பதிப்பு : நான்காம் பதிப்பு :அக்டோபர் 2011 : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் : (பி)லிட் , சென்னை.
2. நற்றிணை - பதிப்பு : நான்காம் பதிப்பு :அக்டோபர் 2011 : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் : (பி)லிட் , சென்னை.
3. புறநானூறு - பதிப்பு : நான்காம் பதிப்பு :அக்டோபர் 2011 : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் : (பி)லிட் , சென்னை.
4. அகநானூறு - பதிப்பு : நான்காம் பதிப்பு :அக்டோபர் 2011 : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் : (பி)லிட் , சென்னை.

********* ********* ********** ********* ********* ********** ********** **********